ශ්‍රී ලංකා මහ බැංකුව

இலங்கை மத்திய வங்கி

CENTRAL BANK OF SRI LANKA

# இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழ் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை மீளத்தொடங்குதல்

## த பினான்ஸ் கம்பனி பிஎல்சி இன் வைப்பாளர்களுக்கு [உரிமம் இரத்து செய்யப்பட்டது]

அண்மையில் இயற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித் தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம், த பினான்ஸ் கம்பனி பிஎல்சி இன் தகுதியான வைப்பாளர்கள்/ தகுதியான வைப்பாளர்களின் தொடர்புடைய சட்டபூர்வ பயனாளிகளுக்கு, இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் **06.02.2024** இல் இருந்து மீளத்தொடங்கும் என்பதுடன் அத்தகைய கொடுப்பனவுகள் **21.05.2024** வரை தொடரும் என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவிக்க விரும்புகிறது.

இதன்படி, **இதுவரை இழப்பீட்டைப் பெற்றிராத** தகுதியான வைப்பாளர்கள்/ தகுதியான வைப்பாளர்களின் தொடர்புடைய சட்டபூர்வ பயனாளிகள், உயர்ந்தபட்சம் ரூ.1,100,000/= என்ற தொகைக்கு உட்பட்டு, 06.02.2024 தொடக்கம் 21.05.2024 வரையிலான காலப்பகுதிக்குள் தொடர்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலிருந்தும் தங்களது இழப்பீட்டு உரிமைகோரல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விசாரணைகளுக்கு : 0112 477 261, 0112 477 977

வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களம்